# ஆவடி இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரை!

–12ஆம் பக்கத் தொடர்ச்சி



அதற்காகத்தான் தலைவர் அவர்கள் ஒவ்வொரு தொகுதியிலும், இளைஞர் அணியின் சார்பாக கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை, ஆரம்பிக்கச் சொன்னார். இன்றைக்கு உங்கள் கைகளில் காலத்தின் நிறம் கருப்பு-சிவப்பு புத்தகமும் கொடுக்கப்படும். அதற்கான காலத்தை எடுத்துக் கொண்டு தயவுசெய்து, ஒரு நாளைக்கு 5 பக்கங்களை படியுங்கள். உங்களின் அரசியல் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இங்கே ஒன்றியம் - பகுதி - வட்டச் செயலாளர்களும் வந்து இருக்கிறீர்கள். உங்களுக்கு என் அன்பான வேண்டுகோள். புதிய பொறுப்புகளுக்கு வந்திருக்கின்ற இளைஞர் அணித் தம்பிகளுக்கு உங்கள் அளவுக்குப் பெரிய அரசியல் அனுபவம் இருக்காது. சில பேர் அரசியலுக்கே முதல் தலைமுறையாகக் கூட வந்திருப்பார்கள். ஆகவே, அவர்கள் ஏதாவது, சின்னத் தவறு செய்தாலும், நெறிமுறைகள் தெரியாமல் நடந்து கொண்டால், அவர்களை தயவுசெய்து தண்டித்து, புறக்கணிக்காதீர்கள். அவர்களுக்குக் கூட இருந்து நீங்கள் வழி நடத்துங்கள்.

இப்படி தமிழ்நாடு முழுவதும், நகர - பேரூர் வார்டுகள், ஊராட்சிக் கிளைகள் - பாகம் தோறும் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை நியமிக்கிறோம். இப்படி நியமித்தால், இளைஞர் அணியில் நிர்வாகிகள் மட்டுமே 5 லட்சம் பேர் வருவார்கள். அப்படி ஒரு நிலை உருவானால், இந்தியாவிலேயே அசைக்க முடியாத ஒரு இயக்கமாய் திராவிட முன்னேற்றக் கழகம் மாறும்.

இப்படி நியமிக்கப்பட்டு வரும் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான சந்திப்பை மண்டல வாரியாக நடத்த திட்டமிட்டுள்ளோம். வருகிற டிசம்பர் 14-ஆம் தேதி, திருவண்ணாமலையில் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு மண்டல அளவிலான சந்திப்பை நடத்த இருக்கிறோம். அதற்கான அறிவிப்பை விரைவில் நம் கழகத் தலைவர் அவர்கள் வெளியிடுவார்கள்.

இன்றைக்கு, பல இளைஞர்கள் எந்த இயக்கத்தில் சென்று சேர்வது என்ற குழப்பத்தில் இருக்கிறார்கள். அந்தக் குழப்பத்தை எல்லாம் தீர்க்க வேண்டும் என்றால், இங்கு வந்துள்ள இளைஞர் அணி நிர்வாகிகள் கழகத்தின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். அரசின் திட்டங்கள், சாதனைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். மாற்றுக் கட்சியில் இருக்கும் இளைஞர்களிடம் நம் கழகத்தின் வரலாற்றைப் பற்றிப் பேசுங்கள்.

### 200 இளம் பேச்சாளர்கள்

இன்றைக்கு இளைஞர் அணி களத்தில் மட்டுமல்லாமல், கருத்தியல் ரீதியாகவும் பல பணிகளைச் செய்கிறோம். சட்டமன்றத் தொகுதி தோறும் கலைஞர் நூலகங்களைத் திறக்கிறோம். சுமார் 200-க்கும் அதிகமான இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்து தலைமையிடம் ஒப்படைத்துள்ளோம். கலைஞர் மாணவர் பத்திரிகையாளர் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம். திராவிட இயக்க ஆய்வாளர்கள் - எழுத்தாளர்களை ஊக்குவிக்க கலைஞர் நிதி நல்கைத் திட்டத்தை அறிவித்துள்ளோம். இப்படிப் பல்வேறு பணிகளை நம் இளைஞர் அணி செய்து கொண்டு இருக்கிறது.

கழகத்துக்கு இன்னும் அதிகமான புதிய இளைஞர்களை நாம் அழைத்து வர வேண்டும். இதை நான் தேர்தலுக்காக மட்டும் சொல்லவில்லை. தேர்தலுக்காகத் துவங்கப்பட்ட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. தேர்தலுக்குப் பிறகும் நமக்கு மிகப்பெரிய பலமாக இளைஞர் பட்டாளம் இருக்க வேண்டும்.

நம்மிடம் கொள்கை, திராவிட மாடல் அரசின் சாதனைகள் இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசின் திட்டங்களைப் பார்த்து ஒட்டுமொத்த இந்தியாவே பாராட்டுகிறது. பல்வேறு மாநில முதலமைச்சர்கள் இங்கு வருகை தந்து நம் முதலமைச்சரின் திட்டங்களைப் பாராட்டுகிறார்கள். அது பொறுக்காமல் தான் ஒன்றிய பா.ஜ.க அரசு பல்வேறு வகையில் நம் அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கிறார்கள். இதை எல்லாம் எதிர்த்துக் குரல் கொடுக்கிற ஒரே தலைவர் நம்முடைய தலைவர் அவர்கள்தான்.

புதியக் கல்விக்கொள்கை என்று சொல்லி மும்மொழிக் கொள்கையை ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குள் திணிக்கப் பார்க்கிறார்கள். இந்தியையும் சமஸ்கிருதத்தையும் தமிழ்நாட்டுக்குள் மீண்டும் கொண்டு வரப் பார்க்கிறார்கள்.

சமீபத்தில் கோவை வந்திருந்த பிரதமர் மோடி, அவரால் தமிழ் பேச முடியவில்லை என்று வருத்தப்பட்டுப் பேசினார். அதற்கு நான் பதில் சொல்லி இருந்தேன். பிரதமர் அவர்களே, தமிழ் பேச முடியவில்லை என்று மிகவும் வருத்தப்பட்டீர்களே, இப்படி ஒரு நாடகம் ஆடுகிறீர்களே, நான் கேட்கின்ற கேள்விக்கு பதில் சொல்லுங்கள், கடந்த 10 ஆண்டுகளில் தமிழ் வளர்ச்சிக்குப் பா.ஜ.க அரசு வெறும் 150 கோடிதான் ஒதுக்கியது. ஆனால், சமஸ்கிருதத்துக்கு 2,500 கோடி நிதி ஒதுக்கினார்கள். இதுதான் பிரதமர் மோடிக்குத் தமிழ் மீது இருக்கின்ற பாசம். செத்த மொழி சமஸ்கிருதத்துக்கு 2,500 ரூபாய் ஒதுக்கியுள்ளது ஒன்றிய பா.ஜ.க அரசு.

### பாசிச பா.ஜ.க அடிமை அ.தி.மு.க.

இன்றைக்கு அ.தி.மு.க அடிமையாக இருக்கிற மாதிரி, ஒட்டுமொத்தத் தமிழ்நாடு பா.ஜ.க-வுக்கு அடிமையாக இருப்பார்கள் என்று பாசிச பா.ஜ.க இன்றைக்கு ஆசைப்படுகிறார்கள். இப்போது அ.தி.மு.க-வின் எதிர்காலமே பா.ஜ.க கையில்தான் இருக்கிறது.

நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நானும் வெளி மாவட்டங்களுக்குப் போனால், அந்த மாவட்டத்துக்கு ஏதாவது சிறப்புத் திட்டங்களை அறிவிப்பது வழக்கம். இன்றைக்குக் காலையில் கூட திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளோம். பல்வேறு திட்டங்களைத் துவக்கி வைத்துள்ளோம்.

ஆனால், சென்ற வாரம் கோயம்புத்தூருக்கு வந்த பிரதமர் மோடி அவர்கள் வந்திருந்தார். கோயம்புத்தூருக்கு ஏதாவது திட்டங்களை அறிவித்தாரா என்று பார்த்தீர்கள் என்றால் ஒன்றுமில்லை.

நம் தமிழ்நாடு அரசு கொடுத்திருந்த, கோவைக்கும் - மதுரைக்கும் மெட்ரோ ரயில் திட்டம் வேண்டும். அதை நிராகரித்து இருக்கிறார் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள்.

தேர்தல் நெருங்குவதால், பிரதமர் இனி அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வருவார். சென்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு மூன்று மாதங்களில் எட்டு முறை வந்தார். பாறையில் - குகையில், கடலுக்கு அடியில் எல்லாம் சென்று தியானம் செய்வார். புதிது, புதிதாக வித்தை காட்டுவார். அவர் எவ்வளவு வித்தை காட்டினாலும், தமிழ்நாட்டு மக்களையும், நம் தி.மு.க-காரனையும் என்றைக்கும், யாராலும் ஏமாற்ற முடியாது.

அதற்கு ஜால்ரா தட்டுவதற்கு ஒரு கூட்டம் இன்றைக்குத் தயாராக இருக்கிறது. அதுதான் அடிமைக் கூட்டம். இன்றைக்கு அந்த அடிமைக் கூட்டம் பல்வேறு அணிகளாகப் பிரிந்திருக்கிறது. ஈ.பி.எஸ். அணி, ஓ.பி.எஸ் அணி, சசிகலா அணி, டிடிவி அணி, செங்கோட்டையன் அணி என்று பல அணிகள் இருக்கிறது.

இந்த ஒவ்வொரு அணிக்குள்ளும் தினமும் சண்டை நடக்கிறது. அது, அ.தி.மு.க-வில் எது சிறந்த அணி என்பதற்கான சண்டை கிடையாது. இருக்கிறதுலேயே பா.ஜ.க-வுக்கு எந்த அணி சிறந்த அடிமை என்கிற சண்டைதான் அது.

அ.தி.மு.க, பா.ஜ.க-வின் நேரடி அடிமை என்றால், இன்னும் சில கட்சிகள் மறைமுக அடிமைகளாகக் கிளம்பி இருக்கிறார்கள். இந்த அடிமைகள் ரேஸில், இன்றைக்கு முதல் இடத்தில் இருப்பவர்தான் அ.தி.மு.க-வின் நிரந்தரப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள்தான்.

இந்த அளவுக்குக் கூட அடிமைகள் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடைக்க மாட்டார்கள் என்ற அளவுக்கு ஒரு கடைந்தெடுத்த அடிமையாக அ.தி.மு.க இன்றைக்குப் பா.ஜ.க கையில் மாட்டியுள்ளது.

பேருந்தை எடுத்துக் கொண்டு குறுக்கும் - நெடுக்குமாகப் பழனிசாமி சென்றார். இதைத்தான் நான் அப்போதே சொன்னேன். எடப்பாடி பழனிச்சாமி பஸ்ஸை எடுக்கிறப்ப கூட்டமா இருக்கும். அவர் பஸ்ஸை விட்டு இறங்கிறபோது அவர் மட்டும்தான் இருப்பார் என்று சொல்லி இருந்தேன்.

நான் சொன்னதைப்போல இன்றைக்கு அ.தி.மு.க-வில் இருந்து பல்வேறு தலைவர்கள், மூத்த முன்னோடிகள் எல்லாம் விலகிக் கொண்டு இருக்கிறார்கள். இப்போது எடப்பாடி எடுத்துக் கொண்டு போன அந்தப் பஸ் பிரேக் டவுன் ஆகி, ஒர்க் ஷாப்பில் நிற்கிறது.

இதுவெல்லாம் ஏன் நடக்கிறது என்றால், எடப்பாடி பழனிசாமி அவர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் மீதும், தமிழ்நாட்டின் மீதும், அ.தி.மு.க-வின் மீது எந்த அக்கறையும் கிடையாது. அவர் தன் எதிர்காலம் மட்டும் போதும் என்று இருக்கிறார். அதற்காக எல்லாவிதமான துரோகத்தையும் தமிழ்நாட்டு மக்கள் மீது திணிக்கத் தயாராக இருக்கிறார். இப்போது பா.ஜ.க அரசு எஸ்.ஐ.ஆர். திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். அதை நம் கழகம் எதிர்த்து, வழக்காடும் மன்றம் வரை சென்றுள்ளது. ஆனால், இந்த எஸ்.ஐ.ஆர். திட்டத்தை ஆதரித்த இயக்கம் என்றால், அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். பாசிச பா.ஜ.க-வின் வாக்குத் திருட்டு நடவடிக்கைக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் துணை போகிறார்.

இந்த எஸ்.ஐ.ஆர். முறைக்கேட்டின் மூலமாக சிறுபான்மையினர், மகளிர், ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்கை நீக்க வேண்டும் என்றுதான் பா.ஜ.க - தேர்தல் ஆணையத்தின் துணையுடன் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்த எஸ்.ஐ.ஆர். முறைக்கேட்டை எதிர்த்தும் இன்றைக்குக் கழக உடன்பிறப்புகள்தான் களத்தில் நின்று ஒவ்வொருவரின் வாக்கையும் காப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள்தான். ஆகவே, அந்தப் பணிகளை நாம் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

ஒரு தகுதியான வாக்காளர் கூட நீக்கப்பட்டு விடக் கூடாது. அதேமாதிரி, போலியான வாக்காளர்களைப் பட்டியலில் சேர்த்தால், அதையும் நாம் தடுத்தாக வேண்டும். அடுத்து வருகின்ற 4 மாத காலம் மிக மிக முக்கியமான காலம்.

### வெற்றி பெற வேண்டும்

இங்கு பொறுப்புக்கு வந்திருக்கிற புதிய நிர்வாகிகள், உங்களின் பூத்தில், தெருவில் இருக்கிற வாக்குகளுக்குப் பாதுகாவலர்களாக இருக்க நீங்கள் இருக்க வேண்டும். மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகளுடன் சேர்ந்து எஸ்.ஐ.ஆர். பணிகளை நீங்கள் சரியாகச் செயல்படுத்த வேண்டும். பா.ஜ.க - அ.தி.மு.க-வை வீழ்த்துவதற்கான போரில் நம் இளைஞர் அணி முன்வரிசையில் நின்று, போரிட்டு அதில் வெற்றிப் பெற்று காட்ட வேண்டும். வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில், கழக அணி 200-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெறும் என்று நம் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். 200 இல்லை 200-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்றுக் காட்ட வேண்டும். அதற்கான தொடக்கமாக இந்த ஆவடி சட்டமன்றத் தொகுதி இருக்க வேண்டும்.

### உறுதி ஏற்போம்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார். தி.மு.க-வை வீழ்த்துவதற்கு நிறைய பேர் புதிதாகக் கிளம்புவார்கள், அவர்களுக்கெல்லாம் நான் சொல்லிக் கொள்வது ஒன்றே, ஒன்றுதான் என்று பேரறிஞர் அண்ணா சொன்ன வார்த்தையை இங்கு சொல்ல விரும்புகிறேன்.

நீங்கள் தி.மு.க-வை குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்று நான்கு அடி தோண்டுவீர்கள். நீங்கள் குழி தோண்டுவதற்குள் நாங்கள் 8 அடியாக வளர்ந்திருப்போம். அதன்பிறகு 8 அடிக்குக் குழி தோண்டுவீர்கள், அப்போது நாங்கள் 16 அடியாக வளர்ந்திருப்போம். நீங்கள் எங்களுக்குக் குழி தோண்டத் தோண்ட தி.மு.க வளர்ந்து கொண்டே இருப்போம் என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். அதேபோன்று, இன்றைக்கு தி.மு.க-வை அழிக்க நினைப்பவர்களுக்கு நான் பதிலாகக் கூறிக்கொண்டு, 2026 சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்று 7-ஆவது முறையாகக் கழக ஆட்சியை அமைக்க, 2-ஆவது முறையாக நம் தலைவர் அவர்களை முதலமைச்சராக்கிட இளைஞர் அணியின் பங்கு வருகிற சட்டமன்றத் தேர்தலில் அதிகமாக இருக்க வேண்டும். அதற்கான உறுதியை இந்தக் கூட்டத்தில் நாம் அனைவரும் ஏற்போம் என்று கூறிக் கொள்கிறேன்.

புதிய வட்ட, கிளை மற்றும் பாக இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் உட்பட இங்கே வருகை தந்திருக்கும் உங்கள் அத்தனைப் பேரின் பணிகளும் சிறப்பாக இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் ஆவடி நாசர், சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி, திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் வள்ளுவர் ரமேஷ், ஆவடி மாநகர மேயர் உதயகுமார், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில இணைச் செயலாளர் ஜெரால்டு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், ஜி.பி. ராஜா, மாநகரச் செயலாளர் சன் பிரகாஷ், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, விக்னேஷ் ஆனந்த், மாவட்டக் கழக நிர்வாகிகள் ராஜு, வி. ஜே.சீனிவாசன், காயத்ரி ஸ்ரீதரன், ஜெயபாலன், நரேஷ் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் பி.டி.சி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா, நகரக் கழகச் செயலாளர்கள் என்.ஏ.கே.மூர்த்தி, ரவி, ஏழுமலை, பகுதி கழகச் செயலாளர்கள் நாராயணன் பிரசாத், பொன் விஜயன், பேபி சேகர், ராஜேந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் தேசிங்கு, கமலேஷ், ஜெயசீலன், பிரேமானந்த், தங்க முரளி, முரளி கிருஷ்ணா, மாநகராட்சிப் பணிகள் குழுத் தலைவர் ஆசிம் ராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் சுரேஷ் குமார், லோகேஷ், கிரண், மாநகர அமைப்பாளர் துர்கா பிரசாத், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் செந்தாமரை, ஜி.சி. சி.கருணாநிதி, வி.ஜே.உமாமகேஸ்வரன், அக்னி ராஜேஷ், பிரியா குமார், சதீஷ் குமார், மாநகர இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் ஸ்ரீதர், முஸ்தபா அப்ரிதி, சதீஷ் குமார், புவனேஷ், ரங்கநாதன் என்கிற மகேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் எத்திராஜ், விமல் வர்ஷன், முத்தமிழ் செல்வன், குமார், மகாதேவன், காஞ்சனா சுதாகர், சங்கர், அப்பு (எ) ஜெபராஜ் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.


# இனமானம் காக்கும் இளந்தலைவர்!



கழகம் பெற்ற
வரமே....
மக்கள் துயர் துடைக்கும்
கரமே...!

காலநேரம் பாராது
களமாடும் நெஞ்சுரமே...
கொள்கை முழங்கும்
செஞ்சூரியனே!

மேடைகளில்
நாகரிக சொல்லாட்சி...
நல்லவர் போற்றும் நல்லாட்சி!

பெரியார் அண்ணா
கலைஞர் தளபதி
நால்வரும்
சரிவிகிதத்தில்
கலந்த இளைஞர்.....

அஞ்சா நெஞ்சம்
துஞ்சா உழைப்பு
இவைதாம் உங்கள்

அன்றாட அனுசரிப்பு....

எல்லோர்க்கும் பிடித்த
எளிமையே
உங்களின் வலிமை!

மக்களின் இடர்ப்பாடு
ஏதும் கேள்வியுற்றால்
உடனே அங்கு நோக்கி
உங்கள் புறப்பாடு!...

இளைஞர் நலன்

காக்கும் இளவலே
பகுத்தறிவுப் புதையலே!...

விளையாட்டுத் துறைக்கு
நீங்கள் பொறுப்பு
பதக்கங்கள் குவிகிறது
தமிழகத்தில் சிறப்பு!

மக்கள் பணி செய்யும்
மகத்தான இளந்தலைவர்
கோடி, தமிழர்களின்
துணை முதல்வர்
வாழிய பல்லாண்டு !

**சேப்பாக்கம் எஸ். எச்.ரஹ்மத்துல்லாஹ்**
சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர்
சென்னை மேற்கு மாவட்டம்






வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி அரியூர் தொடக்க பள்ளியில் SIR குறித்த சிறப்பு தீவிர வாக்காளர்கள் திருத்தல் பணி நடைபெற்று வருகிறது அதை வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார் இதில் கழக நிர்வாகிகள் ஏழுமலை அரி BLA 2 பூத்து முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உடன் இருந்தனர்.


# இளந்தலைவருக்கு இதயபூர்வமான பிறந்தநாள் வாழ்த்துகள்!



இன்று மற்றோர் புதிய உதயம்..
உற்றோர் போற்றும் உயர்ந்த இதயம்

நன்று செய்தாய் பலவும் இந்த மாநிலம் பயனுறவே..

ஒன்று சொல்வேன் எந்தன் நெஞ்சில் என்றும் நிறைந்த “இதயநிதி”

ஸ்டாலின் துர்கா தம்பதியரின் தவப்புதல்வரே ..!
இன்பன் தன்மயா செல்வங்களின்
பாசத்தந்தையே !!

கட்சித்தொண்டனாய் இளைஞரணித் தலைவராய் , கடைசித்தொண்டனையும் வழி நடத்தும் “இனிய நிதி”

மகன் தந்தைக்காற்றும் உதவி மட்டுமல்லாமல் தாத்தா பெயரை தரணி போற்றச்செய்யும் பெயரனாய்..அதனைப் பெரும்பேறாய் செய்திடும் “பெருமை நிதி”

தமிழக இளைஞர்களை தனிக்கவனத்தோடு வழி நடத்தி, தரணி வலம் வரச் செய்யும் “தங்க நிதி”

துணை முதல்வராய் தனயனின் பணியை திறம்பட ஆற்றி தந்தைக்கு துணை செய்யும் எமதன்பு “உதயநிதி”

நலம் சேர்க்கும் நாற்பத்தெட்டில் நடைபோடத் துவங்கும்
நன்மையே செய்யும் நாயகனே...

உன் தலைமையில் களமாட உள்ளம் உவகை கொள்கிறது...

அ றிவாலயம் கண்ட
ஆ லமரத்தின் விழுதே!
இ ந்நாள் பொன்னாள்.

ஈ டில்லா பெருநாள்
உ ன்னை மறவோம்
ஊ ண் உயிர் தருவோம்
எ ல்லை இல்லா கருணை நீ!
ஏ தெதிர்பார்க்கா தமிழன் நீ!
ஐ யமில்லா எம் தலைவன் நீ!
ஒ ப்புயர்வற்ற உன்னதன் நீ!
ஓ டி உழைக்கும் மின்னல் நீ!
ஔ வைத்தமிழ் போற்றும் தொண்டன் நீ
எ ஃ க்கென இதயம் கொண்ட எம் தலைவா !

பிறந்தநாள் வாழ்த்துக்கள்..
தமிழ் போல வாழ்க!
தரணி போற்ற வாழ்க!!

**டாக்டர் வா.மைத்ரேயன்**
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்,
தி.மு.க. கல்வியாளர் அணி துணைத் தலைவர்

